1979 ஏப்ரல் 9]

கலிங்கியம் குளம் மதகுகள்.

*வினா எண் 677— திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி சர்க்கார் சாமக்குளம் கலிங்கியம் குளத்தில் 3 ஆண்டுகளுக்கு முன்பு உடைந்த மதகு புதுப்பிக்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

(ஆ) இந்த மதகை புதுப்பிக்க எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) போதிய நிதி ஒதுக்கீடு இல்லாததால் சென்ற ஆண்டுகளில், புதுப்பிக்கும் வேலையை எடுத்துக்கொள்ள இயலவில்லை.

(ஆ) சர்க்கார் சாமக்குளத்தை ஒரு நிலைப்படுத்தும் திட்டத்திற்கு தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் ரூ. 30,000/-க்கான ஓர் மதிப்பீட்டுக்கு ஒப்புதல் அளித்துள்ளார். மதகுகள் புதுப்பிக்கும் வேலை முடிவுபெற்றுவிட்டது. குளத்தை ஒருநிலைப்படுத்தும் வேலை 31-3-79-க்குள் முடிக்கப்படும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, மேற்படி குளம் சம்பந்தப்பட்ட வரைக்கும் மதகு உடைந்துவிட்ட காரணத்தால், கடந்த நான்கு ஆண்டுகளாக பாசன வசதியில்லாமல் அங்குள்ள விவசாயிகள் அவதிப் படுகிறார்கள். அந்தக் குளத்தின் பரப்பளவு எவ்வளவு, எத்தனை ஏக்கர்? இதில் ஒரு வருடம் தேங்கி நிற்கின்ற தண்ணீர் எவ்வளவு ? இந்த நான்கு ஆண்டுகளில் தண்ணீர் இல்லாததால் ஒட்டு மொத்தமாக விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பு எவ்வளவு ? என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: இதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போட்டால் விவரம் சொல்லுகிறேன்.

Research into communication of diseases through domestic animals.

*678 Q.— Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Agriculture and Irrigation be pleased to state :—

(*a*) whether any research has been made by the Veterinary College in this State into the communication of diseases from domestic animals to human beings; and

(*b*) if so, the details thereof ?

[* 497-498-ம் பக்கங்களில் இணைப்பு 11 ஆக அச்சிடப் பெற்றுள்ளது]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) அவையின் முன் அறிக்கை *ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆர். மணிமாறன் : இந்த ஆராய்ச்சியின் மூலமாக எத்தனை பேர்கள் ஆராய்ச்சி செய்யப்பட்டார்கள், எத்தனை மனிதர்கள் உட்படுத்தப்பட்டார்கள், என்ன கண்டுபிடிக்கப்பட்டது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சியின் மூலமாக ஏறத்தாழ 4,884 பசுக்களின் ரத்தநிண நீர் எடுக்கப்பட்டு ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டது. 5.25 விழுக்காடு அளவுக்கு 'ப்ரூஸெல்லோசிஸ்' என்கிற நோய் பரவியுள்ளதுஎன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மனிதர்கள் 383 பேர்கள் பரிசோதனை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய இரத்தத்தை சேகரித்து பரிசோதனை செய்ததில் 8.9 விழுக்காடு 'ப்ரூஸெல்லோசிஸ்' என்ற நோய் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. ரா. அய்யாசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தாராபுரம் தொகுதியில் சின்னக்கரை அணைத் திட்டம் என்ற ஒரு திட்டம் இருந்து வந்தது. இந்த திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; மூலக்கேள்விக்கு இது தொடர்பில்லை. தனிக்கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு நோய் தொத்துகிறது என்கிற விஷயத்தில் அதைத் தடுக்கின்ற நடவடிக்கைகளை மக்கள் நல்வாழ்வுத்துறை மேற்கொண்டு வருகிறது. பொதுவாக அறியாமையினால் பெரும்பாலான மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக சொறி நாய்கள் கடித்துவிட்டால் பின்னால் காக்காய்வலிப்பு வருகிறதா என்று விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படி பயங்கரமான தொத்துநோயை தடுப்பதற்கு, ஏற்கனவே இரண்டுக்கு மேல் வேண்டாம், மூன்று பெற்றால் மோசம், நான்கு பெற்றால் நாசம் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கிற மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் இப்பேர்ப்பட்ட பிரச்சாரங்களை செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1979 ஏப்ரல் 9]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினர் மக்கள் நல்வாழ்வுத்துறையும் இந்தத் துறையும் சேர்ந்து இதற்கு பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். கால்நடை மருத்துவத்துறை மூலமாக பலவிதமான கால்நடைகளிலிருந்து இப்படிப்பட்ட பல தொற்றுநோய்கள் மனிதர்களுக்கு பரவுகிறது என்பது ஆராய்ச்சி மூலம் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, குழந்தைகளை நாய்கள் கடிப்பதனால் வெறிநோய் என்ற நோய் பரவுகிறது என்பது இந்த ஆராய்ச்சியின் மூலமாக கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பண்ணை சேதுராம்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு விலங்குகளான பசுக்களிலிருந்து புருசல்ஸ் நோய் மனிதர்களுக்கு பரவுகிறது. அதைப் பற்றி ஆராய்ச்சி நடத்தியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். வீட்டு விலங்குகள் என்று சொல்லும்போது நாய். பூனை, எலி போன்றவைகளிலிருந்து கூட சில வியாதிகள் பரவுகின்றன. எலி தானாகவே செத்தால் காலரா வரும்; பிளேக் வரும். நாய் கடித்தால் சில வியாதி வரும்: பூனையாலும் சில வியாதிகள் வரும். இவைகளை யெல்லாம் இந்த அரசு தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கால்நடைகளைப் பற்றி அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல். 31 எலிகளையும், 32 பெருச்சாளிகளையும் பரிசோதித்ததில் எலிகளில் 19 சதவிகிதமும், பெருச்சாளிகளில் 43.9 சதவிகிதமும் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதுபோன்ற நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு டிபார்டுமென்ட் ஆப் பிரிவென்டிவ் மெடிசன் என்பதன் மூலம் இந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 'புருசல்ஸ்' என்ற நோயைப் பற்றிச் சொன்னார்கள். அதற்குத் தமிழில் என்ன பெயர்? இரண்டாவதாக, இப்போது வீட்டு விலங்குகளிலிருந்து மனிதர்களுக்கு நோய் பரவுகின்றது என்றார்கள். நான் கேட்கிறேன், மனிதர்களிலிருந்துகூட விலங்குகளுக்கு நோய் பரவுகின்றது என்று சொல்லப்படுகிறதே, அது சம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, கர்ப்பக் காலத்தில் கருச் சிதைவு, பால் குறைதல், கன்று இறப்பு. மலட்டுத் தன்மை போன்றவைகளுக்குத் தான்

'ப்ரூஸெல்லோசிஸ்' என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த நோயைத் தடுப்பதற்காக பல வழிகளில் இன்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இன்று கால்நடைகளால் இந்த நோய் மனிதர்களுக்குப் பரவுகின்றபோது. கடும் காய்ச்சல் திரும்பத் திரும்ப தோன்றும். கீல் மூட்டில் வலி ஏற்படும். ஆக இவைகள் எல்லாம் ஏற்படுகின்றன என்பதைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

திரு. இ. தமிழரசன்: பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு விலங்குகளில் முக்கியமாக வெறி நாய் கடித்தது பற்றி எத்தனை பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது. அதில் எத்தனை பேர்களுக்கு இந்த நோய் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ? என்பதையும், குறிப்பாக மனிதர்களுக்கு காச நோய் ஏற்படுவதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவர் அவர்களே, வெறி நோய் என்கிற நோய் பற்றி 287 நாய்களுக்கும், 63 மனிதர்களுக்கும் கார்னியா டெஸ்ட் செய்யப்பட்டது. 287 நாய்களில் 268 நாய்கள் வெறி நோயால் பாதிக்கப்பட்டன என்றும், 63 மனிதர்களில் 55 மனிதர்கள் வெறி நோயால் பாதிக்கப்பட்டார்கள் என்றும் நிரூபனமாகியிருக்கிறது. மிகுதி இருக்கின்ற 8 பேர்களுக்கும் குணம் ஏற்பட்டிருக்கிறது. இப்படி கார்னியா டெஸ்ட் மூலம் பரிசோதித்து அவர்களுக்கு உதவி அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. அ. ச. செங்கோட்டையன்: பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடைகளுக்கு காச நோய் பரவுவது அரசுக்குத் தெரியுமா ? அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, காச நோய் கால்நடைகளுக்கும், மனிதர்களுக்கும் பெருமளவிற்கு ஏற்படும் கொடிய நோயாகும், இது 3 வகையாகச் சொல்லப்படுகிறது. மாட்டு வகை என்றும், மனித வகை என்றும், கோழி வகை என்றும் மூன்றுவித காச நோய்கள் இருக்கின்றன. இது மனிதர்களின் மூலமாக கால்நடைகளுக்கு அதிகமாகப் பரவுகின்றன என்று ஆராய்ச்சியின் மூலம் கண்டுபிடுக்கப்பட்டு இருக்கிறது,

[முற்பகல் 9.40]

திரு. சொ. ந. பழனிசாமி: வீட்டு விலங்குகளிடமிருந்து மனிதருக்கு நோய் பரவுவது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். குன்னூருக்குப் பக்கத்திலுள்ள பாஸ்ட்யூர் நிலையத்தில் இதுபற்றி ஆராய்ச்சி செய்ய அரசு ஏதாவது யோசனை செய்யுமா ?